The Times of India

Dated: 26.02.2025

Legal experts endorse 'one nation, one election' bill

TIMES NEWS NETWORK

New Delhi: Legal experts on Tuesday endorsed the 'one nation, one election' (ONOE) bill as they appeared before the Joint Parliamentary Committee (JPC) examining the proposed legislation and said it did not violate the "basic structure doctrine on federalism" and was not against the democratic principles of the Constitution.

Former Chief Justice of India **U U Lalit** suggested that the concept of simultaneous Lok Sabha and assembly elections was good in theory but several factors should be addressed for its smooth implementation. Former Law Commission chairperson Ritu Raj Awasthi too shared his views as the panel began consulting experts and stakeholders.

Unlike JPC meetings on contentious issues like the Wakf Amendment Bill, the members are learned to have had a prolonged discussion on Tuesday even as opposition members criticised the concept, with Congress MP Priyanka Gandhi Vadra claiming ONOE would weaken democracy by tinkering with tenure of legislatures and impinge on people's rights.

A BJP ally wondered if a gap of five years between two elections would weaken elected representatives' accountability to people, they added. IAS officer Niten Chandra, secretary of the high-level Kovind committee, and E M Sudarsana Natchiappan, a senior advocate and former Congress MP who had headed a parliamentary committee in 2015 that favoured simultaneous polls, also appeared before the panel. They could not share their views due to paucity of time and are expected to present their views in the next meeting.

Awasthi is learned to have told the panel that the proposed measure did not violate the basic structure doctrine on federalism and was not against the democratic principles of the Constitution. Sources said while the ministry answered some questions, others were sent to the Election Commission for a calibrated response.

The New Indian Express
Dated: 26.02.2025

Former CJI appears before JPC, calls for caution in holding ONOE

PREETHA NAIR @ New Delhi

AT the third meeting of the Joint Parliamentary Committee (JPC) examining the 'One Nation One Election (ONOE)' Bill, former Chief Justice of India **U U Lalit** made several suggestions, including rolling out simultaneous polls in a phased manner, said sources.

During his deposition before the panel, Lalit said the concept of simultaneous Lok Sabha and assembly elections was good in theory but many factors should be addressed for its smooth implementation. While Lalit served as the 49th CJI for a brief tenure in 2022, he was part of the Constitution bench that banned triple Talaq in 2017. In 2019, he recused himself from the Babri Masjid -Ayodhya dispute verdict.

Former Law Commission of India chairperson Ritu Raj Awasthi also shared his views as the panel began consulting experts and stakeholders. However, several Opposition members criticised the Bill, with Congress MP Priyanka Gandhi Vadra claiming "ONOE" will weaken democracy by tinkering with tenure of legislatures and impinge on people's rights, according to sources.

Others including TMC's Kalyan Banerjee, DMK's P Wilson and Congress' Manish Tewari raised several concerns regarding the Bill, arguing that it will undermine federalism and is anti- constitutional. A BJP ally wondered if a gap of five years between two elections will weaken elected representatives' accountability to people, they added.



Awasthi spoke in detail about the benefits of the simultaneous Lok Sabha and state assembly elections in terms of savings and boost to development. He argued that the Bill is in accordance with basic structure of the Constitution and it doesn't violate the Constitution or undermine federalism. Awasthi was of the opinion that Parliament can legislate the bill. Awasthi led 22nd Law Commission, which submitted its report on Simultaneous polls to the Union Law Ministry in March last year. The Law commission had recommended synchronising the terms of state Assemblies in "two phases" in the next five years so that the first simultaneous elections could be held in May-June 2029.

IAS officer Niten Chandra, secretary of the high-level Kovind committee, and E M Sudarsana Natchiappan, a senior advocate and former Congress MP who had headed in 2015 a parliamentary committee that favoured simultaneous polls, also appeared before the panel. They could not share their views due to to paucity of time and are expected to present their views later. The parliamentary committee's agenda for the February 25 meeting is briefly listed as "interaction with legal experts".

The high-level committee headed by ex-president Ram Nath Kovind was constituted by the Modi government on 'one nation one election' and it had in its voluminous report strongly batted for the concept. Subsequently, the Union Cabinet accepted the committee's recommendations and the government tabled two bills, including one seeking to amend the Constitution, in Lok Sabha.

D.T. Next

Dated: 26.02.2025

ONOE must be rolled out in phased manner: Ex-CJI Lalit to Parl panel

NEW DELHI: Former Chief Justice of India UU Lalit suggested on Tuesday that simultaneous Lok Sabha and assembly polls should be rolled out in not one go but in a phased manner as he shared his views with the Joint Committee of Parliament studying the two bills for 'one nation one election' (ONOE), sources said.

They added that Lalit in his remarks said the concept of simultaneous Lok Sabha and assembly elections was a good idea but noted that the law, as envisaged by the bills, could be challenged in the apex court, and proposed some changes.

Former Law Commission of India Ritu Raj Awasthi told the 39-member committee headed by BJP MP PP Chaudhary that the proposed law does not violate the basic structure doctrine on federalism and is not against the democratic principles of the Constitution. Justice Awasthi, the judicial member of the anti-corruption ombudsman Lok Pal, said the Constitution (129th Amendment) Bill had all the ingredients to hold simultaneous polls in the country.

Opposition members criticised the concept, with Congress MP Priyanka Gandhi Vadra claiming 'one nation one election' will weaken democracy by tinkering with the tenure of legislatures and will impinge on people's rights, the sources said.

A BJP ally wondered if a gap of five years between two elections would weaken elected representatives' accountability to people, they added. An opposition questioned the neutrality of the Election Commission, which is constitutionally tasked with the conduct of elections.

Some members of both the ruling BJP as well as opposition parties, which have slammed the idea of 'one nation one election' (ONOE) as unconstitutional, interpreted the overall thrust of Lalit's lengthy remarks as favouring their respective stand more.

Dinamalar

Dated: 26.02.2025

ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் கூட்டாட்சிக்கு எதிரானது அல்ல

மத்திய சட்ட அமைச்சகம் விளக்கம்

– நமது டில்லி நிருபர் –

'லோக்சபா தேர்தலோடு சேர்த்து நாடு முழுதும் உள்ள சட்டசபைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது, எதிர்க்கட்சிகள் கூறுவதுபோல, ஜனநாயகத்திற்கு விரோதமானதும் இல்லை; கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரானதும் இல்லை' என, மத்திய சட்ட அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அரசு செலவினங்களை குறைக்கும் வகையில், லோக்சபாவுக்கும், நாடு முழுதும் உள்ள அனைத்து மாநில சட்டசபைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது.

எதிர்ப்பு

இதையடுத்து, ஒரே நாடு ஒரே தேர்தலுக்கு வழிவகுக்கும், 129வது அரசமைப்பு சட்டத்திருத்த மசோதாக்களை அதிரடியாக பார்லிமென்டில் தாக்கல் செய்தது. இதற்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன.

இந்நிலையில், மத்திய சட்டத்துறை அமைச்சகத்திடமிருந்து, ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறைக்கு உறுதியான ஆதரவு கிடைத்துள்ளது.

அதன்படி, 'லோக்சபா தேர்தலோடு, நாடு முழுதும் உள்ள சட்டசபைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது ஜனநாயகத்துக்கு விரோதமான காரியம் அல்ல.

வரைவுக்குழு

அவ்வாறு ஒரு சேர தேர்தல் நடத்தினால், இந்தியாவின் கூட்டாட்சி தத்துவம் சீர்குலைந்துவிடப் போவதில்லை' என, சட்ட அமைச்சகத்தின் வரைவுக்குழு கருத்து தெரிவித்துள்ளது. மத்திய சட்ட அமைச்சகத்தின் இந்த ஆதரவு, மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையில், நாடு முழுதும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் முடிவு குறித்து, சட்ட நிபுணர்களுடன் கலந்து ஆலோசிக்கவும் பார்லிமென்ட் கூட்டுக்குழு முடிவு செய்துள்ளது.

நேற்று டில்லியில் நடந்த பா.ஜ., மூத்த எம்.பி., சவுத்ரி தலைமையிலான 39 உறுப்பினர்களைக் கொண்ட பார்லிமென்ட் கூட்டுக் குழு ஆலோசனைக் கூட்டத்தில், இந்த திட்டத்தின் உயர்மட்டக் குழுவின் செயலர் நிதின் சந்திரா, சட்டக் குழுவின் தலைவரான நீதிபதி ரித்து ராஜ் அவஸ்தி ஆகிய இருவரும் நேரில் வந்து தங்களது கருத்துகளை பதிவு செய்தனர்.

ஆக்கப்பூர்வமான அணுகுமுறை

நல்லமுறையில்ஆலோசனைக் கூட்டம் நடந்தது. அனைத்து உறுப்பினர்களும் அக்கறையுடன், அதேசமயம் ஆக்கப்பூர்வமான அணுகுமுறையையும் கொண்டிருந்தனர். இவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு நீதிபதி அஸ்வதி உள்ளிட்டோர் உரிய விளக்கத்தை தந்தனர். இந்த விளக்கங்களை அனைத்து உறுப்பினர்களும் முழுமனதுடன் வரவேற்றனர். நாங்கள் அனைவரும் இந்த விஷயத்தில் ஒரு குழுவாக பணியாற்றி வருகிறோம்.

– பி.பி.சவுத்ரி, பார்லி., கூட்டுக்குழு தலைவர்.

Dinamalar

Dated: 26.02.2025

அறிவிப்பே வரல... அதற்குள் என்ன அவசரம்? 39 என்பது 52 தொகுதிகளாக கூட மாறலாம்!

அடித்துச் சொல்கிறார் கோபால்சாமி

சென்னை, பிப். 26–

'தமிழகத்திற்கான லோக்சபா தொகுதிகளின் எண்ணிக்கை குறையும் என்பது பொருத்தமற்றது' என, முன்னாள் தலைமை தேர்தல் கமிஷனர் கோபால்சாமி தெரிவித்தார்.

இதுகுறித்து, அவர் நம் நாளிதழுக்கு அளித்த பேட்டி:

கடைசியாக 2008ல் தொகுதி மறுவரையறை நடந்தது. முதலில் 1981 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், நடத்த திட்டமிடப்பட்டது. பிறகு அது சரியாக இருக்காது எனக் கூறி, 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மறுவரையறை செய்ய முடிவு செய்யப்பட்டது.

இதற்கு, தங்களுக்கான லோக்சபா தொகுதிகள் குறைந்து விடும் எனக் கூறி, பல மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவித்தன.

இதனால், உறுப்பினர் எண்ணிக்கை மாறாமல், தொகுதிகளின் எல்லைகள் மட்டும் மாற்றியமைக்கப்பட்டன.

அப்போது, 2026க்கு பிறகு எடுக்கப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், மீண்டும் லோக்சபா, மாநில சட்டசபை தொகுதிகளை மறுவரையறை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

தொகுதி மறுவரையறை செய்ய வேண்டுமானால், அதற்கு முதலில் பார்லிமன்டில் சட்டம் கொண்டு வர வேண்டும்.

கடந்த 2008 போலவே, லோக்சபாவின் 543 தொகுதி எண்ணிக்கையை, அப்படியே வைத்துக் கொண்டு, அந்தந்த மாநிலங்களுக்குள், தொகுதிகளின் எல்லைகளை மட்டும் மாற்றி அமைக்கலாம். அல்லது 543 என்ற எண்ணிக்கையை இரு மடங்காகக் கூட ஆக்கலாம்.

அப்படி செய்தால், அதை ஒவ்வொரு மாநிலத்திலும் எப்படி அதிகரிப்பது என்பதற்கு, விதிகள் வகுக்க வேண்டும். மக்கள் தொகை அடிப்படையில் மட்டும் அதிகரிப்பதா அல்லது வேறு காரணிகள் அடிப்படையில் அதிகரிப்பதா என்பதை முடிவு செய்ய வேண்டும். ஏற்கனவே, பார்லிமென்ட், மாநில சட்டசபைகளில், பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்க, சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே, இப்போதிருக்கும் 543 தொகுதிகளோடு, கூடுதலாக 33 சதவீத தொகுதிகளை, அதாவது 179 தொகுதிகளை அதிகரிக்கலாம். அதன்படி பார்த்தால் தமிழகத்திற்கு 13 தொகுதிகள் அதிகரித்து, 52 தொகுதிகள் கிடைக்கும்; இதற்கும் வாய்ப்புள்ளது.

பார்லிமென்டில் சட்டம் கொண்டு வந்து, அதற்கென ஒரு கமிட்டி அமைத்து, அதன்பிறகு மறுவரையறை செய்ய வேண்டும். அதற்கான எந்தப் பணிகளும் நடக்காத நிலையில், தமிழகத்திற்கு இத்தனை தொகுதிகள் குறையும்; உ.பி., போன்ற மாநிலங்களுக்கு அதிகரிக்கும் எனக் கூறுவது பொருத்தமற்றது.

இவ்வாறு அவர் கூறினார்.

Dinamani

Dated: 26.02.2025

ஒரே நாடு ஒரே தேர்தல்

நாடாளுமன்றக் குழுவிடம் சட்ட நிபுணர்கள் கருத்து

புது தில்லி, பிப்.25: 'ஒரே நாடு ஒரே தேர்தல்' தொடர்பான இரு மசோதாக்களை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற கூட்டுக் குழு முன் சட்ட நிபுணர்கள், அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் செவ்வாய்க்கிழமை ஆஜராகி கருத்துகளை தெரிவித்தனர்.

முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி யு.யு.லலித், முன்னாள் சட்ட ஆணையத் தலைவர் ரிதுராஜ் அவஸ்தி, மூத்த வழக்குரைஞரும் முன்னாள் காங்கிரஸ் எம்.பி.யுமான இ.எம்.சுதர்சன நாச்சியப்பன், நிதின் சந்திரா ஐஏஎஸ் உள்ளிட்டோர் நாடாளுமன்றக் குழுவிடம் தங்களது கருத்துகளை பதிவுசெய்தனர்.

கூட்டாட்சிக்கு பாதிப்பில்லை: அப்போது ரிதுராஜ் அவஸ்தி பேசியதாவது: ஒரே நாடு ஒரே தேர்தல் முறையை அமல்படுத்துவதால் குடிமக்களின் வாக்குரிமைக்கு எவ்விதத்திலும் பாதிப்பு ஏற்படாது அதேபோல் கூட்டாட்சி தத்துவம், ஜனநாயக நடைமுறைக்கும் பாதிப்பில்லை என்றார்.

மக்களவை, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிய முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு அளித்த பரிந்துரையை ஏற்று இரு மசோதாக்களை கடந்த ஆண்டு மத்திய அரசு மக்களவையில் அறிமுகம் செய்தது.

இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், இந்த இரு மசோதாக்களையும் ஆய்வு செய்வதற்காக பாஜக எம்.பி. பி.பி.செளதரி தலைமையில் பாஜக, காங்கிரஸ் உள்பட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 39 பேர் அடங்கிய நாடாளுமன்றக் கூட்டுக் குழு அமைக்கப்பட்டது.

ஜனநாயகத்தை பலவீனமாக்கும்: இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் எம்.பி.பிரியங்கா காந்தி ஒரே நாடு ஒரே தேர்தல் முறை ஜனநாயகத்தை பலவீனமாக்கும் நடவடிக்கை என கண்டனம் தெரிவித்தார்.

Dinakaran

Dated: 26.02.2025

ஒரே நாடு ஒரே தேர்தல்

நாடாளுமன்ற குழுவிடம் பிரியங்கா கடும் எதிர்ப்பு

புதுடெல்லி, பிப். 26: மக்களவை, சட்டப்பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த அரசியலமைப்பு சட்ட திருத்தம் உட்பட 2 மசோதாக்கள் மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு, அவை நாடாளுமன்ற கூட்டுக்குழு ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுதொடர்பாக, பாஜ எம்பியும் முன்னாள் சட்ட அமைச்சருமான பி.பி.சவுத்ரி தலைமையில் 39 எம்பிக்கள் கொண்ட கூட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 2 கூட்டங்களை நடத்திய இக்குழு 3வது முறையாக நேற்று கூடியது.

இதில், நிபுணர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடம் கருத்துகள் கேட்கப்பட்டன. உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி யு.யு. லலித் ஒரே நாடு ஒரே தேர்தல் நல்ல செயல்முறை என்றாலும் அதை சீராக செயல்படுத்த பல விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தினார். ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதால் அரசின் நிதி சேமிக்கப்படுவதோடு வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் என சட்ட ஆணைய தலைவர் ரிதுராஜ் அவஸ்தி வரவேற்றார்.

அதே சமயம், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த கருத்தை எதிர்த்தனர். காங்கிரஸ் எம்பி பிரியங்கா காந்தி, “சட்டப்பேரவைகளின் பதவிக்காலத்தை சீர்குலைப்பதன் மூலம் ஜனநாயகத்தை பலவீனப்படுத்தும் செயல், மக்கள் உரிமையை மீறும் செயல்” என எதிர்ப்பு தெரிவித்தார்.